# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண். 12/2025

### அ.சா. 1 (LW 1 )

| பெயர் | திரு.ஹேமலதா | தொழில் | ேி ஹே |
|---|---|---|---|
| க பெயர் | இருளப்பன் என்ற ராசு | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 11.03.2026 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 10 எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மணப்பாறையில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன். வழக்கில் இறந்த இருளப்பன் என்ற ராசு எனது கணவர் ஆவார். வழக்கு சமயத்தில் புதுப்பட்டி பொன்மாந்துரையில் குடியிருந்தேன். எனக்கு 3 பிள்ளைகள் இருக்கிறார்கள். என் கணவர் பூர்வீக வீடு விற்பதில் கமிசன் கொடுத்தது சம்மந்தமாக பிரச்சனை இருந்தது. சம்பவத்திற்கு பின் மணப்பாறை சென்று விட்டோம். எனது கணவருக்கு புதுப்பட்டி பொன்மாந்துரையில் சொந்தமாக வீடு உள்ளது. பழனி பைபாசில் என் கணவரால் கட்டப்பட்ட வீடு விற்கப்பட்டது. கடந்த 07.08.2023 , 2024 என்று ஞாபகம் இல்லை, நான் பொன்மாந்துரையில் இருந்த போது மதியம் 02.30 மணி வாக்கில் குழாயில் வீட்டிற்கு முன்னாடி தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த போது வீட்டிற்குள் இறந்து போன என் கணவர் இருந்தார். 4,5 பசங்கள் முகத்தில் துணியை கட்டிக் கொண்டு வீட்டிற்குள் ஓடினார்கள். ஓடும்போது என்னை பிடித்து தள்ளிவிட்டு ஓடிவிட்டார்கள். நான் உள்ளே போய் பார்த்த போது என் கணவருக்கு தலையில் முன்பக்கம், காது ஓரத்தில் வெட்டுக் காயம் இருந்தது. இரத்த வெள்ளத்தில் கிடந்தார். குப்புரிக்க அடித்து கீழே கிடந்தார். எனது வீட்டிற்கு பின்பகுதி காட்டுப்பகுதி என்பதால் அதன் வழியாக ஓடி விட்டார்கள். அதன் பின்பு நான் வெளியே வந்து சத்தம் போடவும் என் மாமியார் வீரம்மாள், என் நாத்தனாரின் கணவர் மனோகர், கார்த்திக் ஆகியோர் வந்து பார்த்தார்கள். அதன் பின்பு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். போகும் வழியிலேயே இறந்து விட்டார். 108 ஆம்புலன்சுன் மனோகரன் உடன் சென்றார். நான் இருசக்கர வாகனத்தில் பின்தொடர்ந்து சென்றேன். இது சம்மந்தமாக புகாரை நான் எழுதி கையெழுத்திட்டுக் கொடுத்தேன். புகாரில் மனோகர்

சாட்சி கையெழுத்து போட்டார். புகாரிலுள்ள விவரம் எனக்கு தெரியும். புகார் **அ.த.சா.ஆ.1**. ஆகும். அன்றைய தினம் வந்தவர்கள் முகத்தில் துணி கட்டியிருந்ததால் அவர்கள் ஆஜர் எதிரிகளா என்று தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகாரை யார் எழுதினார்கள் என தெரியாது. புகாரிலுள்ள கையெழுத்தை காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரிதான். புகாரிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

**<u>இந்நிலையில் அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி பாரதீய சாட்சிய அதிநியம் சட்டம் பிரிவு 157 ன் கீழ்குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களைத்தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அது உண்மையானவைதான்.

**<u>மறு விசாரணை -இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.11 22:14:36 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.